## சென்னை மெட்ரோ ரயில் சேவை :

# ஜனவரிக்குள் முதற்கட்டத் திட்டத்தின்படி அனைத்து வழித்தடங்களிலும் முழுமையாக இயங்கும்

### சட்டப்பேரவை உரையில் ஆளுநர் உறுதி

சென்னை, ஜன.3-

சட்டப்பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

உலகத்தரம் வாய்ந்த நகர்ப் புறப் பொதுப் போக்குவரத்து சேவையை சென்னை மாநகரில், சென்னை மெட்ரோ ரயில் உருவாக்கியுள்ளது. இத்திட்ட வழித்தடத்தின் ஒரு பகுதியில் சேவைகள் ஏற்கெனவே தொடங்கியுள்ள நிலையில், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் முதற்கட்டத் திட்டத்தின் அனைத்து வழித்தடங்களிலும் சேவைகள் முழுமையாக இயக்கப்படும். சுமார் 3,770 கோடி ரூபாய் செலவில் வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரையிலான முதற்கட்ட விரிவாக்க திட்டச் சேவைகள், 2020-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டமிட்டபடி துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தினை, 107.55 கிலோமீட்டர் நீளத்திற்கு செயல்படுத்துவதற்கு மாநில அரசு ஏற்கெனவே கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையானது 20,196 கோடி ரூபாய் நிதியுதவியினை, 52 கிலோமீட்டர் நீளத்திற்கான மாதவரம்-சோழிங்கநல்லூர் மற்றும் மாதவரம்-சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரையிலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளுக்கு தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ 4,770 கோடி ரூபாய்க்கான முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டுள்ள நிலையில், இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து அமைப்பை செயல்பாட்டிற்கு கொண்டுவரும் முயற்சியாக, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப்

போக்குவரத்துக் குழுமச் சட்டம் மற்றும் அதற்கான சட்ட விதிகள், 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் நாளன்று அறிவிக்கை

செய்யப்படும் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உயர்கல்வித் துறையில் 48.6 என்ற மொத்தச் சேர்க்கை விகிதத்துடன், நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

கிராமப் பகுதிகளிலிருந்தும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதிகளிலிருந்தும் வரும் மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி எளிதில் கிடைக்கச் செய்ய 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக, 2018-19 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத்திட்டம் இந்நோக்கத்திற்குப் பேருதவியாக உள்ளது. இதுதவிர, 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடத்திட்டங்கள் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. கற்பித்தல் தரத்தையும், ஆராய்ச்சிகளையும் பன்னாட்டுத் தரத்திற்கு மேம்படுத்த, உயர்கல்வி நிறுவனங்கள் தகுதி வாய்ந்த, திறமையான துணை வேந்தர்களின் தலைமையின் கீழ் இயங்க வேண்டும். அதன் அடிப்படையில், துணை வேந்தர்கள் நியமனத்தில் ஒளிவு மறைவற்ற, வெளிப்படைத் தன்மையுடன் தேர்வு மற்றும் நியமன நடைமுறைகளை இந்த அரசு கடைபிடிக்கிறது. மேலும், பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களுக்கான காலிப் பணியிடங்களும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன. அரசின்இத்தகைய முயற்சிகளால், உயர்கல்வியின் தரமும், ஆராய்ச்சிப் பணிகளின் தரமும் கணிசமாக மேம்படுத்தப்படும் என நான் நம்புகிறேன்.

அரசு மற்றும் அரசின் உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிகணினிகள் உட்பட கல்வி உபகரணங்கள், நான்கு இணை சீருடைகள், புத்தகப்பைகள், காலணிகள், பேருந்து கட்டணச் சலுகைகள் மற்றும் மிதிவண்டிகளை இந்த அரசு விலையில்லாமல் வழங்குவதை நான் பாராட்டுகிறேன்.

மாணவிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் இந்த அரசின் திட்டத்தால், பள்ளிகளில் மாணவிகளின் இடைநிற்றல் குறைக்கப்பட்டு பள்ளிச் சேர்க்கை அதிகரித்துள்ளது. உயர்தர பள்ளிக் கல்வியை வழங்குவதற்காக, தேவையான இடங்களில் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்தியும், தேவைக்கேற்ப பள்ளிகளைத் தரம் உயர்த்தியும் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மாணவ, மாணவிகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காக, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 'அடல் டிங்கரிங் ஆய்வகங்கள்', அறிவுத் திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் பள்ளிக்கூடங்களில் அமைக்கப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

மாநிலத்தின் சராசரி எழுத்தறிவு நிலையைக் காட்டிலும் பழங்குடியினரின் எழுத்தறிவு நிலை குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது. எனவே, பழங்குடியின மாணவர்களுக்கு அதிகப் பயனளிக்கும் வகையில், பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளைத் துவக்கும், அரசு சாரா நிறுவனங்களுக்கு இந்த அரசு நிதியுதவி வழங்கும் புதியதொரு திட்டத்தை விரைவில் தொடங்கவுள்ளது.

விரிவான பொது சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு கணிசமாக முன்னேறியுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதைய மாதிரிப் பதிவு புள்ளிவிபரப்படி, மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 66 ஆகவும், பச்சிளம்குழந்தை இறப்பு விகிதம் ஆயிரம் குழந்தை பிறப்புகளுக்கு 17 ஆகவும் குறைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், உயர்தர மருத்துவ சிகிச்சை வசதிகளை ஏழை எளிய மக்களுக்கு அளித்து வருகிறது. 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல்

மத்திய அரசின் முன்னோடித் திட்டமான 'பிரதம மந்திரியின் ஜன ஆரோக்யத் திட்டத்தோடு' தமிழ்நாட்டின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் இந்த அரசு ஒருங்கிணைத்து, ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு அளவை இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. தகுதியுள்ள கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் முதல் பிரசவத்திற்கு நிதியுதவி வழங்கும் மத்திய அரசின் திட்டமான 'பிரதம மந்திரியின் மாத்ரு வந்தனா திட்டம்' 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், தமிழ்நாட்டின் முன்னோடித் திட்டமான 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துடன்' ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

'மகளிர் சுகாதாரத் திட்டம்', 'அம்மா குழந்தை நலப் பெட்டகம்', 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' போன்ற மாநில அரசின் முன்னோடித் திட்டங்கள் தாய் சேய் நலத்தைப் பேணுவதற்கான இந்த அரசின் முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்த்து வருகின்றன. மதுரை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்க, 1,264 கோடி ரூபாயை அனுமதித்த மத்திய அரசிற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில்' உள்ள மக்களுக்கு உயர்நிலை மருத்துவ வசதிகளை அளிப்பதில் இம்முயற்சி பேருதவியாக அமையும்.

இவ்வாறு ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.